நிறைவான, இதயபூர்வமான நன்றியையும் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்பிக்குள் தவமிருந்து முத்துக்கள் உதிப்பதுபோல், செந்தமிழ் பூமிக்கு சேவையாற்றி சந்தனமாய் கரைந்த தாய்! ஊர் வாழ உயிர்கள் வாழ உருகும் மெழுகாக ஓடிஓடி உழைத்த தாய்! ஆணாதிக்கம் நிறைந்த அரசியலை தேனாதிக்கம் நிறைந்த சாதனைகளால் வாகை சரித்திரத்தை வடித்த தாய்! இலட்சத்திற்கும் மேற்பட்ட எளியோருக்கும் பச்சை மையில் கையெழுத்திடும் பாக்கியத்தைக் கொடுத்த நம் தாய்! *(மேசையைத் தட்டும் ஒலி)* எளிய தொண்டனான என்னை மூன்று முறை முதல்வராக்கி, தான் சுமந்த தலைப்பாகையை, நான் சுமக்கும் புண்ணியத்தை, எளியவன் எனக்கும் எடுத்தே கொடுத்த தாய்! இப்புவியில் தமிழினம் சிறப்புறவே, ஒப்பில்லா தம் பிறப்பை ஒப்படைத்து உழைத்த தாய்! *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அம்மா அவர்கள் நம்மை எல்லாம் நம்பி இப்பேரவையில் உரைத்த கடைசி சூளுரை, "எனக்குப் பின்னாலும், நூறு ஆண்டுகள் ஆனாலும் தமிழகத்தை கழகம்தான் ஆளும்" என்பதுதான்! *(மேசையைத் தட்டும் ஒலி)* காலமகள் தந்த கோலத் திருமகளின் அந்தக் கடைசி சபதத்தை கணீர்குரல் சத்தியத்தை, தேசியகீதமாக நாம் தினம்பாடி உழைப்போம்! மூன்றாம் முறையாகவும் இந்த முத்தமிழ் இயக்கத்தின் ஆட்சியை அமைத்திட, ஓயாது உழைப்போம்! *(மேசையைத் தட்டும் ஒலி)* களம் புகும் போர்க்களத்தில் கம்பீரமாய் ஜெயிப்போம்! *(மேசையைத் தட்டும் ஒலி)* புனித ஜார்ஜ் கோட்டையில் மீண்டும் சித்திரைத் திங்களில் *(மேசையைத் தட்டும் ஒலி)* முத்திரை பதித்து புது வரலாறு படைப்போம்! அதற்காக ஊன் உறக்கம் தவிர்ப்போம்! ஒன்றரைக் கோடி சிப்பாய் படையோடு வாகை சரித்திரம் வடிப்போம் என்று கூறி, *(மேசையைத் தட்டும் ஒலி)* மீண்டும் மே திங்களில் இப்பேரவையில் மீண்டும் சந்திப்போம் என்று சொல்லி, எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2020-2021, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2020–2021 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது.*

MESSAGE

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the financial year 2020–2021."

6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2020–2021, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020–2021 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020–2021 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 27–2–2021 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2020–2021 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2020-2021 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	7	–	25,00
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	1	–	–
3	நீதி நிருவாகம்	14,33,07	–	–
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	7,89,42	3,72,69	–
5	வேளாண்மைத் துறை	74	7	–
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	306,72,27	43,15,50	–
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	10,95,80	5	–
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	10,14,58	–	–

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	13,26,47	42,29,87	–
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	56,43,70	8,23	–
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	14	–	–
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	479,61,08	2,12,94	2,54,44
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	12	3	–
14	எரிசக்தித் துறை	4,085,60,02	345,90,57	1
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	1	–	–
16	நிதித் துறை	20	1	1
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	138,17,60	–	23,57
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	5,58,08	–	–
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1,486,70,28	597,09,69	–

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
20	உயர் கல்வித் துறை	165,24,33	5	–
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	21	45	–
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	9,32,85	4	25,50,62
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	9	1	–
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	10	1,17,55	–
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	10,55,14	–	–
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	14	1	–
27	தொழில் துறை	10	18,21,98	390,73,27
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	24,63,79	–	–
29	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	13,08,34	10	94,47
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	16	1,89,73	–

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
31	தகவல் தொழில் நுட்பவியல் துறை	*4,39,05*	–	*15,00*
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	*62*	*5*	*77,50*
33	சட்டத் துறை	*10,11*	–	–
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	*13,05*	*22,52,53*	*30,00,00*
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	*11*	*2*	–
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	*5*	–	–
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	*6*	–	–
38	பொதுத் துறை	*140,97,67*	–	*15,91,25*
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	*92,74,68*	*21*	*7,00*
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	*375,25,67*	*1,005,30,32*	–
41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	*2,54,27*	*63,90*	*48,47*
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	*34*	*4*	–
43	பள்ளிக் கல்வித் துறை	*99,32*	*110,42,40*	–
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	*24*	*4*	*5,04,03*